Registered as a Newspaper பக்கங்கள் 08 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 03 (16-01-1994) ஞாயிற்றுக்கிழமை ஓசை 332

## 1993 க. பொ. த. உ. பரீட்சை; பெப்ரவரியில் வெட்டுப்புள்ளி வரும்

1993ஆம் ஆண்டு க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு தெரிவுசெய்வதற்கான வெட்டுப்புள்ளிகள் விபரம் பெப்ரவரி மாதத்தில் வெளியிடப்படும் என பல்கலைக்கழக விவகார அமைச்சர் திச அத்த நாயக்க தெரிவித்தார். ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னதாக வெட்டுப்புள்ளிகளை வெளியிட முயற்சி செய்தோம். இது தவிர்க்கமுடியாத காரணங்களினால் பெப்ரவரி மாதத்திற்கு பின்போடவேண்டிய நிலை ஏற்பட்டதாக அவர் மேலும் சொன்னார். இவர்கள் இவ்வாண்டு முடிவதற்கு முன்னர் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

## பிரதமர் தலைமையில் தெரிவுக்குழு; புலிகள் ஆலோசனை வழங்கலாம்

### இறுதிச்சந்தர்ப்பம் என்கிறார் ரணில்

(கொழும்பு)

தனது தலைமையிலான பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு விடுதலைப் புலிகள் இயக்கமும் அதன் தலைவர் பிரபாகரனும் ஆலோசனைகளையும் குறைபாடுகளையும் அனுப்பி வைக்கும்படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார். பாராளுமன்ற தெரிவுக்குழு இவற்றைஆராய்ந்து அரசியல் யாப்பில் திருத்தம் செய்யும் எனவும் அவர்குறிப்பிட்டார். அரசுடன் பேச்சு நடத்த புலிகளுக்கு பல சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன. ஆனால் அதை அவர்கள் பயன்படுத்தவில்லை. அவர்களுக்கு விடுக்கும் கடைசி அழைப்பு இதுவாகும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அக்குரஸ்ஸ பகுதியில் சிரமைக்கப்பட்ட மாறம்பைக் குளத்தை திறந்து வைத்தபின் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும் போதே இவ்வாறு பிரதமர் தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில், அரசியல் யாப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்குத் தேர்தலில் வென்று தெற்கில் வெற்றிபெற முயற்சி

### ஐ. தே. க வின் திட்டம் இதுவே

கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலில் எந்தவகையிலேனும் வெற்றிபெறுவதன் மூலம், அவ் வெற்றியை சுட்டிக்காட்டி தென் மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெறலாம் என ஐக்கிய தேசியக்கட்சி திட்டமிட்டுள்ளதாக விக்டர் ஐவன் கூறுகிறார்.

தென் மாகாண சபைத் தேர்தல் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் ஒரு பலப் பரீட்சைக்களமாக அமையப்போவது வெளிப்படை. ஆதலால் அத்தேர்தலில் சட்டம் ஒழுங்கு பேணப்படும் என்பது குறித்து நினைத்தும் பார்க்கமுடியாது என மேலும் அவர் தெரிவித்தார்.

கிழக்கில் வெற்றி பெறுவதற்காக ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் சகல உபாயங்களையும் பயன்படுத்தும் எனவும் இவ் வெற்றியையே தென்மாகாண சபைத்தேர்தல், பொதுத்தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என்பவற்றுக்குப் பிரசாரமாக பயன்படுத்த அரசாங்கம் எண்ணியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# 14,000 துருப்புக்கள் விரைவில் யுத்த களம் அனுப்பப்படுவர்!

## புலிகளைத் தோற்கடிக்க பாரிய நடவடிக்கை என்கிறார் புதிய ராணுவத் தளபதி

(கொழும்பு)

விடுதலைப்புலிகளைத் தோற்கடிக்க பெரும் எடுப்பிலான இராணுவ நடவடிக்

## தமிழக ஆளுநரின் தஞ்சைப் பயணம் ரத்து!

### புலிகள் தாக்கலாமென எச்சரிக்கை

(சென்னை)

தமிழக ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டி நேற்று தமது தஞ்சாவூர் பகுதிக்கான பயணத்தை திடீரென ரத்துச் செய்தார். மாநில புலனாய்வுத்துறையினரின் வேண்டுகோளிற்கு இணங்க இம் முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் அ.தி.மு கவிலிருந்து அண்மையில் வெளியேற்றப்பட்ட விஸ்வநாதன், அழகு

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு பிரபாகரனுக்கு பதில் நூறு பிரபாகரன் பிறப்பார்கள்

# புலிகளைத் தோற்கடிக்க பாரிய நடவடிக்கை என்கிறார் புதிய ராணுவத் தளபதி

(கொழும்பு)

**விடுதலைப்புலிகளைத் தோற்கடிக்க பெரும் எடுப்பிலான இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், இதற்கெனப் புதிதாக 14,000 துருப்புக்களைக் கொண்ட 14 பட்டாலியன்கள் போர்நடக்கும் பகுதிக்கு அனுப்பப்படுவர் என்றும் சிறிலங்காவின் புதிய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா தெரிவித்ததாக லங்காபுவத் செய்தி ஸ்தாபனம் குறிப்பிட்டது.**

ஜெரி டி சில்வாவின் இப்பேட்டியில், விடுதலைப் புலிகளை தோற்கடிக்க பெரும் எடுப்பிலான இராணுவ நடவடிக்கையை விரைவில் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார்

இந்த இராணுவ நடவடிக்கையில் போர் நிறுத்தம் ஏதும் இருக்கமாட்டாது இந்நடவடிக்கைக்காக விரைவில் 14,000 துருப்புகளைக் கொண்ட புதிய 14 பட்டாலியன்கள் போர் நடக்கும் பகுதிக்கு அனுப்பிவைக்கப் படுவர் எனவும் இராணுவத் தளபதி தெரிவித்தார் விடுதலைப் புலிகளை முறியடிப்பதற்கான கால வரப்பு குறித்து அவர் கருத்து தெரிவிக்க மறுத்து விட்டார் எனினும் அரசின் நிபந்தனைகளை புலிகள் ஏற்குமாறு வற்புறுத்தும் வகையில் துருப்புகள் செயற்படும் எனவும் லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா அப்பேட்டியில் மேலும் தெரிவித்தார்.

# ஒரு பிரபாகரனுக்கு பதில் நூறு பிரபாகரன் பிறப்பார்கள்

இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு ஒரு தீர்வாகாது என்று நான் எப்பொழுதும் கூறிவருகிறேன். அப்படித்தான் நடந்தாலும் அது ஒரு முடிவான முடிவாகாது. ஒரு பிரபாகரனை அடக்கினால் நூறு பிரபாகரன்கள் பிறப்பார்கள் என அமைச்சர் தொண்டமான் புரண்ட்லைனுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்,

மேலும் அப்பேட்டியில் தமிழ் இனத்துக்கும் சிங்கள இனத்துக்கும் இடையில் ஒரு பிரச்சினை இருக்கத்தான் செய்கிறது அதற்குத் தேசிய புரிந்துணர்வு தேவை, ஒரு மினி யுத்தத்தினால் தேசிய புரிந்துணர்வையும், சமாதானத்தையும் ஏற்படுத்திவிட முடியாது, பேச்சுவார்த்தைகள்மூலம் ஓர் அரசியல் தீர்வினால்தான் பிரச்சினைக்கு முடிவுகட்டமுடியும், ஒரு திட்டத்தைமுன்வைத்தேன், அரசு அதை கணக்கில் எடுக்கவில்லை, இப்பொழுது எதிர்க்கட்சிகளும் பிரச்சினைக்குத் விரைவில் தீர்வுகாணவேண்டும் என்று விரும்புகின்றன, பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன, ஆளுங்கட்சியுடன் மாத்திரம் நான் பேசவில்லை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எதிர்க்கட்சிகளுடன் சுதந்திரமாகத் தொடர்புகொண்டு தேசிய புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது, வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு பிறக்கும் என்பது எனது நம்பிக்கையாகும் என்றார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

# கடற்படை அகோரத் தாக்குதல் வடமராட்சியில் இருவர் காயம்

(வடமராட்சி)

பொலிகண்டி, திக்கம், ஊறணிகுடியிருப்புகள்மீதுசிறிலங்கா கடற்படையினர் நேற்றுக்காலை 6.15மணிக்கு அகோர ஷெல், பீரங்கி, கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர்காங்கேசன் துறையில் இருந்து விரைந்து வந்த இரண்டு 'டோறா' விசைப்படகுகள் பொலிகண்டி கடற்பரப்பில் இருந்து தாக்கியது.

கடற்படையினரின் இத்தாக்குதலுக்கு இலக்காகி ஒரு வயோதிபமாது உட்பட இருவர் காயமடைந்தனர். தனியார், அரசினர் வைத்தியசாலைகள், குடியிருப்புகள், ஆலயம் பலவும் சேதமடைந்தன.

இத்தாக்குதலில் திக்கத்தைச் சேர்ந்த திருநாவுக்கரசு சின்னப்பிள்ளை (வயது 65) இவர் வீட்டில் படுத்திருந்தபோது சன்னமொன்று வீட்டின் கூரைப்பகுதியைச் சேதமாக்கி இவரது காலைத் துளைத்துததனால் படுகாயமடைந்தார். இவர் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் சிசிச்சை பெற்று வருகிறார்.

பலாலியிலிருந்து இடம் பெயர்ந்து பொலிகண்டியில் வசித்து வந்தவரான பி. குருகுலசிங்கம் (வயது 28) கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த போது கடற்படையினரின் சூடுபட்டு இரண்டு கைகளிலும் சிறுசிறு காயங்களுக்கு இலக்கானார். இவர் வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார். இவரது கட்டுமரம், வலைகள் சேதமடைந்தன.

மேலும் பொலிகண்டி கந்தவன ஆலயம், அருகில் இருந்த தனியார் மருத்துவ நிலையம் வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையின் சமையலறைப்பகுதி ஆகியன சிறு சேதங்களுக்கு இலக்காகியது. வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலை சமையலறைப்பகுதியில் ஒருகுண்டு வெடித்துச் சிதறியது. வெடித்த குண்டும் அப்பகுதியில் காணப்பட்டது சமையல் வேலைகளில் ஈடுபட்டிருந்தவர் மயிரிழையில் தப்பிக் கொண்டார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணை வீச்சு

நேற்றுக் காலை 6.30 மணியிலிருந்து வலிவடக்குநோக்கி தொடர்ச்சியான எறிகணை மற்றும் கனன் தாக்குதல் நடாத்தப்பட்டது. சுமார் 20 எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன.

இத் தாக்குதலில் ப. நோ. கூ. சங்கம், பத்து வீடுகள் தேதமடைந்தன. வலி வடக்கின் சில பகுதிகளிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்தனர்.

## கனேடிய குழு கிளிநொச்சியில்

கனேடிய நல்லெண்ண தூதுக்குழு ஒன்று நேற்று கிளிநொச்சி வந்தது. மூவர் அடங்கிய இக்குழு இருநாள் விஜயமாக கிளிநொச்சி வந்துள்ளது. இக் குழுவினர் விஸ்வமடுவில் உள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களைப்பார்வையிட்டனர். அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகளையும், அரச அதிபரையும் இவர்கள் சந்தித்தனர்.

## கல்கட் ஓய்வு

இந்திய இராணுவத்தின் தென் மண்டல தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் ஏ. எஸ். கல்கட் அண்மையில் ஓய்வு பெற்றுள்ளார் இவர் இந்திய இராணுவம் இங்கு நிலை கொண்டிருந்தபோது அதன் தளபதியாகவும் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது இடத்திற்கு லெப்டினன்ட் ஜெனரல் மோதிதார் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

# ஐ. தே. க. வேட்பாளருக்கு இராணுவத்தால் ஆள்பிடிப்பு

## முகாமிற்கு கையொப்பம் இடச் சென்றவர்கள் ஏழுபேர் வேட்பாளராக நிறுத்தப்பட்டனர்

(கொழும்பு)

இராணுவ முகாமிற்குச் சென்று வாராவாரம் கையொப்பமிட வேண்டிய நிலையில் அங்கு சென்ற ஏழு தமிழ் இளைஞர்கள் கிழக்கு மாகாண உள்ளுராட்சித் தேர்தலில் ஐ. தே. க. வேட்பாளராக்கப் பட்டுள்ளனர். இது குறித்து அவர்கள் தேர்தல் ஆணையாளரிடம்முறைப்பாடு செய்துள்ளனர்.

இதுபற்றி தெரியவருவதாவது; சிறிலங்கா இராணுவத்தினரால் முன்னர் கைது செய்யப்பட்ட இவ் இளைஞர்கள் இராணுவ முகாமிறகு வாராவாரம் சென்று கையொப்பமிடவேண்டும் என இராணுவத்தினரால் கட்டளையிடபபட்டிருந்தனர் இதன்படி முகாமிற்குக் கையொப்பம் இடச் சென்ற இவர்கள் ஐ தே.க. வேட்பாளராக வேட்புமனுத் தாக்கல் செய்யுமாறு இராணுவத்தினரால் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

இராணுவ முகாமில்கப்டன் தர அதிகாரி ஒருவரால் மிரட்டப்பட்டு ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் பட்டியலில் தான்கையொப்பமிட நேர்ந்ததாக அவ் இளைஞர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறான நடவடிக்கை கிழக்கு உள்ளுராட்சித் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சிக்குச் சார்பாக இராணுவத் தலையீடு எவ்வாறு இருக்கப்போகிறது என்பதைக் காட்டுவதாக உள்ளது என 'ராவய' பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்தார்.

# தளபதி கிட்டுவின் ஓராண்டு நிறைவு தமிழீழமெங்கும் அனுஷ்டிக்க ஏற்பாடு;

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசின் சதிச் செயலினால் வீரச்சாவடைந்த விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி சேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் முதலாம் ஆண்டு நினைவு நாள் இன்று தமிழீழமெங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளன.

இன்று நடைபெறவிருக்கும் இந்தநாளையொட்டி அனைத்து பகுதிகளிலும் பல்வேறு அஞ்சலி நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்றைய அஞ்சலி நிகழ்வுகளுக்கான முன்னோடி ஏற்பாடுகள் அனைத்தும் கடந்த இரு வாரங்களுக்கு முன்னமே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. இவ் ஏற்பாடுகள் சில பகுதிகளில் நேற்று நள்ளிரவு வரையும் மேற்கொள்ளப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

அலங்கரிக்கப்பட்ட நினைவுப் பந்தல்கள், வீதி அலங்காரங்கள், பத்து வேங்கைகளினதும் உருவப்படங்கள், மின் அலங்காரங்கள், வங்கக் கடலில் பயணம் செய்யும் படகின் மாதிரி அமைப்புக்கள் என பல்வேறு அம்சங்களைக் கொண்ட அஞ்சலி நிகழ்வுகள் ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

(8ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு வலயத்திற்குள் நள்ளிரவு ஷெல்வீச்சு

## நான்கு பொதுமக்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனை பாதுகாப்பு வலயத்தினுள் எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது நேற்று நள்ளிரவு வேளை நடத்தப்பட்ட இத் தாக்குதலினால் நான்கு பேர் படுகாயம் அடைந்துள்ளனர். அத்துடன் நான்குகடைகள் சேதமடைந்துள்ளன.

மேற்படி பாதுகாப்பு வலயத்தில் உள்ள பழைய பஸ் நிலையப் பகுதியில் இரண்டு எறிகணைகள் வீழ்ந்து வெடித்தமையாலேயே இச் சேதங்கள் ஏற்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பி ஜெயராஜ் (வயது 28), இராசலிங்கம் (வயது 32), இராமையா (வயது 55), தியாகராசா (வயது 57) ஆகியோரே இத் தாக்குதலில் காயமடைந்தவர்களாவர்.

## வரி விளம்பரம்

### மூக்குக்கண்ணாடி

உங்கள் கண்களுக்கும், முகங்களுக்கும் ஏற்ற டாக்டர்களின் மருந்துச்சிட்டைக்கு அமைய, மூக்குக்கண்ணாடிகளை தாமதம் எதுவுமில்லாமல் பெற்றுக்கொள்ள நாடுங்கள். முப்பது வருடங்களுக்கு மேற்பட்ட சேவையில் இன்றும் - மொறாயஸ், 50, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி. யாழ்ப்பாணம். (சி-8274)

### பொங்கல் வெளியீட்டு நூல்கள்

தத்துவஞானி J. கிருஷ்ணமூர்த்தியின் தத்துவஞான சிந்தனைகள், ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் வாழ்வும் வாக்கும், சீரடி பாபாவின் வரலாறும் அற்புதங்களும் விற்பனையாகின்றன. மண்டேலா புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். தத்துவஞான நூலாசிரியர் PROF. சத்தியதாசன் (7221)

### திருமண சேவை

மணமக்கள் தேவைக்கு தொடர்பு கொள்ளவும்- அம்பாள் திருமண சேவை- இல: 22- ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு- வாடிக்கையாளர்களுக்கு எமது பொங்கல் வாழ்த்துக்கள். (7225)

### வியாபாரிகட்கு

பாடசாலை பாக்குகள், உபகரணங்கள், தரமான இமிரேசன் கோல்ட் கவரிங் நகைகள், மணப் பெண்களின் சோடனை நகைகள், லேஸ், நூல்வகைகள் அழகுசாதனப் பொருட்களை நிதான விலைக்கு மொத்தமாக பெற்றுக்கொள்ள-- ஜெயா அழகு சாதனமாளிகை, 177A, மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-8366)

### திருமண சேவை

பொருத்தமான மணமகன், மணமகள் எம்மிடம் உண்டு. தொடர்பு: மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம். (7199)

### கோழிக் குஞ்சுகள்


# யார்முதல்வராகவந்தாலும் மலையக பிரச்சினை தீராது

டி. அய்யாத்துரை

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கும் கம்பெனி நிர்வாகங்கள் தீர்வு காணவில்லை. எனினும் அதற்கும் இ. தொ. காவின் நடவடிக்கைகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக நமது சங்கமும் தோட்டத் தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டியும் தொடர்ந்து போராடி வருகின்றன. அந்தப் போராட்டத்திற்கு இ. தொ. காவும் ஏனைய அரசு சார்புத் தொழிற் சங்கங்களும் ஆதரவு காட்டவேயில்லை. இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், மத்தியமாகாண சபை உறுப்பினருமான டி. அய்யாத்துரை கூறியுள்ளார்.

அட்டனில் இருக்கும் மாநில காரியாலயத்தில் தோட்டத் தலைவர்கள் மத்தியில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், மத்திய மாகாண சபையில் யார் முதலமைச்சராக வந்தாலும் அவர்களால் எமது மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. ஏனெனில் மாகாண சபைகளுக்கு அந்த அதிகாரம் இல்லை. இதை மக்கள் தெளிவாக உணர வேண்டும். இன்றைய சூழ்நிலையில் தோட்டத் தொழிலாளர்கள் மாத்திரமல்ல, மலையக மக்களும் நிதானத்தோடு செயற்பட்டு உரிமைகளை வென்றெடுக்க தயாராக இருக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

# தொண்டா. செல்லச்சாமியும் இணைந்து செயற்படட்டும்

ராஜா செனவிரத்தினா

(கொழும்பு)

உழைக்கும் தொழிலாளர்களின் எதிர்கால நன்மையைக் கருதி தொண்டமானும், செல்லச்சாமியும் மீண்டும் இணைந்து தொழிற் சங்கத்தை மீண்டும் உறுதியாகக் கட்டிக் காக்க வேண்டும். இவ்வாறு இலங்கை தேசியதோட்டத் தொழிற் சங்கப் பொதுச் செயலாளர் ராஜா செனவிரத்தினா கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை யொன்றில், தலைவர்கள் மத்தியில் ஏற்படும் பிரிவினால் அப்பாவித் தோட்டத் தொழிலாளர்கள் பாதிக்கப்படலாம். தொண்டமானுக்கும், செல்லச்சாமிக்கும் இடையிலான இப்பிணக்கிற்குதோட்டத் தொழிலாளர்களைப் பகடைக் காய்களாக பாவித்து அவர்களின் வருமானத்திற்கும் தொழிலுக்கும் பாதிப்பு ஏற்பட இடமளிக்கக் கூடாது. தனிப்பட்ட பிரச்சினைக்காக அப்பாவித் தோட்டத் தொழிலாளர்களை தவறாக வழிநடத்தி சுயலாபம் தேட முற்படக் கூடாது. அதே வேளை தோட்டத் தொழிலாளர்கள் தவறான பிரசாரங்களுக்கு செவி மடுக்காமல் சுயமாக செயற்பட்டுஇத் தலைவர்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும். இவ் இரு தலைவர்களுக்கும் இடையிலான பிரச்சினை தொழிற் சங்கப் பிரச்சினை அல்ல; இது முற்றிலும் அரசியல் பிரச்சினை என்பதையும் உணர வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

## மரநடுகை

மரநடுகையில் அரச நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், பொதுமக்கள் ஆர்வத்துடன் உணர்வுபூர்வமாக செயற்பட்டமையால் இலட்சக்கணக்கான மரங்கள் நடுகை செய்யப்பட்டுள்ளன.

தேக்கு, சவுக்கு, புளி, வேம்பு, பனை மற்றும் பல் வேறுபட்ட பயன்தருமரங்கள் நடுகை செய்யப்பட்டுள்ளன.

நட்ட மரங்களை பராமரிப்பதிலும், மேலும் புதிய மரங்களை நடுவதிலும் மலரும் புதிய ஆண்டிலும், அனைவரையும் பங்கு கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்திக் குறிப்பொன்றின் மூலம் கேட்டுள்ளது.


## விற்பனை முகவர்கள் தேவை

சுரபி உணவு பதனிடல் நிறுவனத்திற்கு

- வலிகாமம்
- வடமராட்சி
- தென்மராட்சி

ஆகிய பிரதேசங்களிலே பணியாற்றக் கூடிய விற்பனை முகவர்கள் தேவைப்படுகின்றனர்.

**சுரபி உணவு பதனிடல் நிறுவனம்**
இருபாலை, கோப்பாய்.

குறிப்பு:- அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(சி8393)

## நூல் வெளியீட்டு விழா

"எமது போராட்டமும் தற்சார்புப் பொருண்மியமும்"

இடம்:- யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு

காலம்:- 16-01-94 ஞாயிறு (இன்று) காலை 10 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

(சி-8394)

## V.K. இராசரத்தினம் அன் சன்ஸ்

சகல விதமான றேடியோக்கள்
கசற் றெக்கோடர்கள்
TV டெக் என்பவற்றைச்


# நினைவு கூருகின்றோம்.

## 1994-01-16

1986ஆம் ஆண்டு கிளிநொச்சி - உருத்திரபுரம், 8-ம் வாய்க்கால் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய-

**உக்கன்** (ராஜேந்திரன் ஜெயகாந்தன் - 336, ஜெயந்திநகர் - கிளிநொச்சி)

**ரகு** (கின்னத்தம்பி (...சி) இதயரூபன் - ஜெயந்தி நகர் - கிளிநொச்சி)

**2-ம் லெப். பாப்பா-பிலிப்ஸ்** (கிருஷ்ணர் ரகுநாதன் - காங்கேசன்துறை - யாழ்)

இதே முற்றுகையில் கொல்லப்பட்ட03 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு திருகோணமலை - மூதூர், கூனித்தீவுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

**பிரகாஷ்** (தியாகராசா சற்குணநாதன் - 8-ம் வட்டாரம் - கூனித்தீவு - திருகோணமலை)

யாழ்ப்பாணத்தில் இந்தியப்படையினரால் மருதனார்மடம் முகாமில் வைத்து அடித்துக்கொலை செய்யப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**கனகலிங்கம் புஷ்பநாதன்** (மொட்டைநாதன் - இணுவில் மேற்கு - யாழ்)

யாழ் - கம்பர்மலை, கெருடாவில் பகுதியில் இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் தடுத்து வைக்கப்பட்டு பின் காணாமற்போன தமிழிளைஞன்,

1991ஆம் ஆண்டு மொனறாகலை ஆற்றில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட படகுவிபத்தில் எமைப்பிரிந்த,

அம்பாறை மாவட்ட அரசியற் பொறுப்பாளர்,

**மேஜர் கஸ்ட்ரோ** (மயில்வாகனம் ரூபானந்தராசா - பொத்துவில் - அம்பாறை)

**கெனிஸ்-ஜெனிஸ்** (சின்னத்தம்பி சுவேந்திரராசா - பொத்துவில் - அம்பாறை)

திருகோணமலை - வில்கம் விகாரை முகாமை விட்டு வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**பைரவன்** (சி.பாஸ்கரன் - அலஸ்தோட்டம் - திருகோணமலை)

**மாயவன்** (நாகரத்தினம் புனிதராசா - குச்சவெளி- திருகோணமலை)

**சாலமன்** (மயில்வாகனம் இராசலிங்கம் - இரணைக்கேணி, குச்சவெளி - திருகோணமலை)

திருகோணமலை - யான் ஓயாப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**நகுலேஸ்** (தர்மலிங்கம் கண்ணன் - திருக்கடலூர் - திருகோணமலை)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சித்தாண்டியைச் சேர்ந்த 02 இளைஞர்கள். மாவடிவேம்பைச் சேர்ந்த ஒருவர் ஆகிய 03 தமிழர்கள்.

1993ஆம் ஆண்டு இந்தியாவின் சென்னைத் துறை

## திருமண சேவை

பொருத்தமான மணமகன், மணமகள் எம்மிடம் உண்டு. தொடர்பு: மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம்.

(7199)

## கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு

பிறிமா லோமன் புரோயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. 'மல்லிகாபதி' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (7247)

## கல்வி நிலையம் திறப்பு

பளைப் பிரதேச கல்வி நிலையத் திறப்பு விழா நாளை திங்கட்கிழமை காலை பத்து மணியளவில் பளை மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. பிரதேசக் கல்வி அலுவலர் ப. அரியரத்தினம் தலைமையில் நடைபெற இருக்கும் இவ் வைபவத்தில் மாவட்ட கல்விப்பணிப்பாளர் சி. கமலநாதன் பிரதம விருந்தினராகவும், பளைப் பிரதேச செயலர் இ. ஐயாத்துரை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்களும் கௌரவ விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

## மலர்மாலை சூட்டும் வைபவம்

வாழையம்மன் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இன்று கல்வியங்காட்டுபகுதியிலுள்ள செல்லக்கிளி அம்மான் நினைவாலயத்தில் இருக்கும் கேணல் கிட்டுவின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை சூட்டும் வைபவம் காலை ஏழு மணியளவில் நடைபெறவுள்ளது.


**V. K. இராசரத்தினம் அன் சன்ஸ்**

சகல விதமான றேடியோக்கள்
கசற் றெக்கோடர்கள்
TV டெக் என்பவற்றைச்
சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், உதிரிப் பாகங்களை நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளவும்

**V. K. இராசரத்தினம் அன் சன்ஸ்**
95, அர்ச்சுனா வீதி,
(ஸ்ரான்லி வீதி)
யாழ்ப்பாணம்.

(7220)



**புதிய பிரிவுகள்**

ஆரம்பம்: 24-01-94

- Cake Icing – கேக் ஐசிங்
- Hair Dressing – சிகையலங்காரம்
- Flower Making – பூ வேலைகள்

இத்துடன்

Short Hand & Typing – ஆங்கிலம், தமிழ்

விபரங்கட்கு:
NORTH CEYLON TECHNICAL INSTITUTE
சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.

(சி-8388)



காலை 10 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்

(சி-8394)

## 8-ம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு:
21.09.1963

வீரச்சாவு:
16.01.1986

**2-ம் லெப். பிலிப்ஸ்/பாப்பா**
(கிருஷ்ணர் இரகுநாதன் - காங்கேசன்துறை)

வருடம் எட்டாயினும்
வாசம் உள்ள மலர் நீ...
விடுதலைக்கு வித்திட்டவரில் - நீயும்
வீறுடன் ஒருவனாய் எழுந்தாய்
பல்கலைக் கழகக் கல்வியைத் துறந்தாய்
பாரினில் எமக்கும் வேண்டும் விடுதலைஎன்றாய்
துறந்தாய் உன் இன்னுயிரை
இனிய தமிழீழத்திற்காய்.

77|2, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு.
அம்மா, சகோதரர்கள்.

(7242)

திய,

**நகுலேஸ்** (தர்மலிங்கம் கண்ணன் - திருக்கடலூர் - திருகோணமலை)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சித்தாண்டியைச் சேர்ந்த 02 இளைஞர்கள். மாவடிவேம்பைச் சேர்ந்த ஒருவர் ஆகிய 03 தமிழர்கள்.

1993ஆம் ஆண்டு இந்தியாவின் சென்னைத் துறைமுகத்திலிருந்து 12 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கடற்பரப்பில் இந்தியப்படையினர் கைதுசெய்ய முற்பட்டபோது கப்பலைத் தகர்த்து வீரச்சாவெய்திய, மூத்த தளபதியும், மத்திய குழு உறுப்பினருமான,

**கேணல் கிட்டு** (சதாசிவம் கிருஷ்ணகுமார்-வல்வெட்டித்துறை)
**லெப். கேணல் குட்டிசிறி** (இராசையா சிறிகணேசன்-சுதுமலை வடக்கு - மானிப்பாய்)
**மேஜர் வேலன் - மலரவன்** (சுந்தரலிங்கம் சுந்தரவேல்-பருத்தித்துறை)
**கடற்புலி கப்டன் ஜீவா** (நடராசா மார்க்ஜெயராஜ்-பாசையூர்-யாழ்)
**கடற்புலி கப்டன் குணசீலன்-குணராஜ்** (சேகரன்குரூஸ் மைக்கல் ஜீவா-கொழும்புத்துறை-யாழ்)
**கடற்புலி கப்டன் றொசான்** (இரத்தினசிங்கம் அருணராசா - அரசடிவீதி-நல்லூர்-யாழ்)
**கடற்புலி கப்டன் நாயகன்** (சிவலிங்கம் கேசவன்-பொலிகண்டி-வல்வெட்டித்துறை)
**கடற்புலி லெப். தூயவன்** (மகாலிங்கம் ஜெயலிங்கம்-அரசடிவீதி- யாழ்)
**கடற்புலி லெப். நல்லவன்** (சிவஞானசுந்தரம் ரமேஸ்-மணியந்தோட்டம்-யாழ்)
**கடற்புலி லெப். அமுதன்** (அலோசியஸ் ஜான்சன்-நாவாந்துறை வடக்கு-யாழ்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-8390)


வங்கக் கடலில் காவியமான

**தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளுக்கும்**


**எமது ஓராமாண்டு நினைவலைகள்**

**சிறி நதியா நகைமாளிகை**

2G ஸ்ரான்லிவீதி, (அர்ச்சுனா வீதி) யாழ்ப்பாணம்.

(சி-8386)

# 1-ம் ஆண்டு நினைவலைகள்



## கேணல் கிட்டு

சேரன்
பல்பொருள் வாணிபம்

அர்ச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி.

கண்டி வீதி,
சாவகச்சேரி.

கண்டி வீதி,
கொடிகாமம்.

காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்

கேணல் கிட்டு



# லெப். கேணல் குட்டிசிறி

மக்கள் மன மேடையிலே
பாசத்தால் உயர்ந்தவனே !
திக்கெட்டும் பெயர் சொல்ல
திரண்ட படையணியின் தளபதியே !

சிங்களப் படையின் சுவடுகள் அழித்து
எங்கள் மண்ணில் உலாவந்த நாயகனே!
உன்னை எண்ணி நாமிங்கு
கண்ணீரைச் சொரிகின்றோம்.

இவர்களுடன் வீரச்சாவையெய்திய

மேஜர் வேலன் (மலரவன்)
கடற்புலி கப்டன் குணசீலன்
கடற்புலி கப்டன் றொசான்
கடற்புலி கப்டன் ஜீவா
கடற்புலி கப்டன் நாயகன்
கடற்புலி லெப். தூயவன்
கடற்புலி லெப். அமுதன்
கடற்புலி லெப். நல்லவன்

ஆகியோருக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

(சி-8392)


காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்

சேரன் விவசாய இரசாயன வாணிபம்
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்

எழினி புடவை வாணிபம்
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணன் விற்பனை நிலையம்
அர்ச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

விக்ரர் இயந்திர உதிரிப்பாக வாணிபம்
அர்ச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

## நினைவுடன் ஒரு வருடம்



லெப். கேணல் "குட்டிசிறி
(இராசையா சிறிகணேசன்)

முற்றத்து மல்லிகையே மொட்டவிழ்ந்து
வீழ்ந்ததேனோ!
மூன்றாம் பிறையே நீ (முழு) அமாவாசையாக
மாறியதேனோ!
முற்றத்து மல்லிகையே மலர்ந்து மணம் வீசிவிடு
மூன்றாம் பிறையே நீ முழு நிலவாக மாறிவிடு.

எம் அன்புச் செல்வத்துடன் கூடி வீரகாவியம் படைத்த கேணல் கிட்டு உட்பட ஏனைய எட்டுப் போராளிகளையும் இத் தினத்தில் நினைவு கூருகின்றோம்:

சுதுமலை வடக்கு, Dr. த. இராசையா
மானிப்பாய். குடும்பத்தினர்
(7211)

## மலசலகூடம் அமைக்க நடவடிக்கை

(வடமராட்சி)

பருத்தித்துறை நகரசபையினர் நான்கு முக்கிய இடங்களில் பொது மலசலகூடம் அமைப்பதற்கான நடவடிக்கையை எடுத்து வருகின்றனர்.

பருத்தித்துறை பஸ் நிலையம், மீன்சந்தை, மயானம், தொழிலாளர்கள் வசிக்கும் இடங்களில் இம்மலசல கூடங்கள் அமைக்கப்படவுள்ளன. மற்றும் முக்கிய கேந்திர நிலையங்களில் பத்து தெரு விளக்குகளை பரீட்சார்த்த முறையில் பொருத்தியுள்ளனர். மேலும் பல தெரு விளக்குகள் பொருத்தப்படவுள்ளதாகவும் நகரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (யோ)

## நோயாளர் தொகை அதிகரிப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் காய்ச்சலினாலும், மலேரியாவினாலும் பாதிக்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. வாட்டுகளில் நோயாளர்கள் நிரம்பி வழிகின்றனர். நாளாந்தம் 50இற்கும் மேற்பட்ட காய்ச்சல் நோயாளர்கள் சிகிச்சைபெற்றுவருகின்றனர். அண்மையில் பெய்த மழையின் காரணமாக ஏற்பட்ட நுளம்பினால் இக்காய்ச்சல் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.
(86)

## மூதூரில் புதிய முகாம்

(திருமலை)

திருமலை மாவட்டம் மூதூரில் மல்லிகைத்தீவு குவாட்டலில் சிறிலங்கா இராணுவத்தினர் புதிய முகாம் ஒன்றை அமைத்துள்ளனர்.

## இதய அஞ்சலி


வங்கக் கடலில் வரலாற்றுக் காவியமான
தங்கத்தளபதி
# கேணல் கிட்டு
அவர்கட்கும்

பொங்கும் கடலில் பொன்னுயிர் நீத்த
வேங்கை வீரர்கள் ஒன்பது பேருக்கும்
எம் இதயம் வடிக்கும்
செந்நீர் அஞ்சலிகள்

காரைநகர் கிராமியக் கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்புக்களினதும் கூட்டுறவுச் சங்கங்களினதும் ஒருங்கிணைப்பு ஒன்றியம்.
(7239)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

(16-01-1994)



பாரத தேசம்
பார்த்திருக்கையில்
கொடுமைகள்
முடியும்
கொடி அது ஏறும்
தங்கள் கனவு
நனவாகும்

யா. மா. சபை ஊழியர்
நலன்புரி சங்கம் (7244)

## பாடசாலையின் குறைதீர்க்க தொழிலாளர்கள்கோரிக்கை

(கொழும்பு)

மடுல்சீமை தமிழ் மகா வித்தியாலயத்தின் குறைகள்தீர்க்கப் படாவிடின் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக தோட்டத் தொழிலாளர்கள் கூறியுள்ளனர்.

மடுல்சீமை தமிழ் மகா வித்தியாலயத்தில் 600 பிள்ளைகள் படிக்கின்ற போதும் கூட ஏழு ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர். அத்துடன் தளபாடங்கள் மற்றும் கட்டட வசதி என்பனவும் பற்றாக் குறையாகவே உள்ளன. இவை தொடர்பாக அரசியல் வாதிகள் மற்றும் தொழிற்சங்கப் பிரமுகர்கள் பலருக்கும் எடுத்துக் கூறிய போதும் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



பொன்னுத்துரை ஜெயா
(ஓமந்தை கொந்தக்காரன்குளம்)

தாயின் மடியில்: ஆண்டவன் நிழலில்:
25-04-73 16-01-92

எம் அழகா ஜெயாவே! உன்னைத் தேடி வந்த எங்கள் கண்களிலே நீ கண்ணீரையல்லவா விட்டுச் சென்றாய். பெற்றவர்க்கும்—உடன் பிறந்தார்க்கும், நம் இனத்துக்கும் வற்றாத்துயர் ஈயும் உன் வரலாறு.

உன் பிரிவால் துயருறும்,
யோகபுரம், அம்மா, அப்பா, தங்கை.
உரும்பராய் கிழக்கு.
(7240)

# வான்வரை உயரும் நின்புகழ்!

# வான்வரை உயரும் நின்புகழ்!



முற்றுகைக்குள் எதிரிப் படைகள் முடங்கி
விழிபிதுங்கிட படை நடத்திய தளபதியே!
சொற்களில் சிக்காத சிற்பமாம் உன்புகழ்
வான்வரை உயரும்! வையம் உள்ளவரை வாழும்!

## தளபதி கேணல் கிட்டு


அவர்களுக்கும்

ஏனைய போராளிகளுக்கும்
எமது அஞ்சலிகளை செலுத்துகிறோம்

நோயாளர் நலன்புரிச் சங்கம்,
யாழ். போதனா மருத்துவமனை.

(7237)

# இந்தியச் சதியில் சிக்கி வங்கக் கடலில் காவியமான வீரவேங்கைகளின் நினைவாக



எங்களின் தேசத்தின் அமைதியை
விரைவினில் வருவிக்க எண்ணி
வங்கக் கடலின் அலைகளினூடே
வேகமாய் விரைந்த எம் தமிழ் வீரரே
இந்தியா செய்த அநியாயத்தால்
உமை நாம் இழந்தோம்
செந்தமிழ் மக்கள் வாழ்ந்திடும் வரையும்
இங்கு நீர் வாழ்வீர் உம் புகழ் வாழும்.

இவருடன் வீரச்சாவையெய்திய ஏனைய வேங்கைகளுக்கும் எமது இதய அஞ்சலிகள்

(7246) - புன்னாலைக்கட்டுவன் வாழ் மக்கள்

## எம். எல். ரி. பரீட்சை அனுமதி அட்டை வந்துள்ளது

மத்தியதர மருத்துவ ஆய்வு கூட தொழில்நுட்ப பயிலுநர்களை தெரிவு செய்வதற்காக நடத்தப்பட இருக்கும் போட்டிப் பரீட்சை(எம்.எல். ரி. பரீட்சை) யாழ். மாவட்ட பரீட்சார்த்திகளுக்கு எதிர் வரும் சனிக்கிழமையன்று யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான அனுமதி அட்டைகள் கொழும்பு பரீட்சைத் திணைக்களத்தில் இருந்து யாழ் மாநகரசபையின் கணக்குப் பதிவாளர் இராமேஸ்வரனால் எடுத்துவரப்பட்டு யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## கொழும்பில் பரீட்சை


அரசாங்க கணக்காளர் வகுப்பு இரண்டில் ஆட்சேர்ப்பதற்கானபோட்டிப் பரீட்சை எதிர்வரும் 22- 01- 94-ல் கொழும்பில் நடைபெறும் என்றும், இதற்கான அனுமதி அட்டைகளை சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகள் கொழும்பு பரீட்சைத் திணைக்களத்திலேயே பெற வேண்டும் என்றும் தெரிய வருகிறது.

## மணிவிழாக்குழு அமைக்கப்பட்டது

சித்தன்கேணி கலைநகரைச் சேர்ந்த பிரபல சமூகத் தொண்டரும் இளைப்பாறிய அதிபருமான திரு. வே. தம்பையா அவர்களது சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் முகமாக கலைநகர் மக்கள் மாபெரும் 'மணிவிழா' ஒன்றினைக் கோலாகலமாக நடத்தவும் மணிவிழா மலர் ஒன்றினை வெளியிடவும் ஏக மனதாகத் தீர்மானித்துள்ளனர்.

இவ்விழாவைத் திறம்பட நடாத்தும் முகமாக 'மணிவிழா' குழு ஒன்று அண்மையில் சட்டத்தரணி த. மு. சுதிர்காமநாதன் தலைமையில் அங்குரார்ப்பணம்செய்து வைக்கப்பட்டுள்ளது.

## நீங்காத நினைவுடன் 1-ம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



### கடற்புலி கப்டன் குணசீலன்

(சே. மைக்கல் ஜீவா)

தாயின் மடியில் 25-01-1971 — வீரச்சாவு: 16-01-1993

உரிமை தேடி உழைத்த உடல் உருக்குலைந்ததோ
சமுத்திரத்தில் உந்தன் உயிர் மடிந்து போனதோ
பெருமையாக தொடர்ந்த பணி நின்று போவதோ
பேருடனே தமிழரென நாங்கள் வாழ்வதோ

குணசீலன் எங்கள் குணசீலன்
குறை தீர்க்கத் தமிழீழம் எழுசீலன் - வித்
துடல் மீதில் பகைதீர எழுதீரன்
எண்ணமெல்லாமுனக்காக தருகின்றோம்
மீண்டும் எம் மண்ணில் எழு குணசீலன்.

எங்கள் தமிழீழக் கனவை நனவாக்க
பொங்கும் அலைமீதில் புலியாய் நீ வந்தாய்
பங்கப் பாரதத்தை பாரடா என்று காட்டி
தங்கக் கிட்டுவுடன் துணையாய் நீ வந்தாய்
எங்கும் படர்கின்ற பாங்கான சாதனையுள்
மங்கா நினைவுடனே மகனே நீ வாழ்கின்றாய்.

இவரின் பிரிவால் துயருறும்
தாய், சகோதர சகோதரிகள்.

தற்போதைய முகவரி:
இல. 36, மவுண்ட்கார்மேல் றோட்,
யாழ்ப்பாணம்.

(7245)

# முதலாண்டின் வீர நினைவலைகள்

உலகத் தமிழினத்தின் மத்தியில் தாயக விடுதலைப் போராட்ட உணர்வை வளர்த்தெடுக்க எங்கள் காவிய நாயகன்

யாழ்ப்பாணம். (7245)

# முதலாண்டின் வீர நினைவலைகள்

## உலகத் தமிழினத்தின் மத்தியில் தாயக விடுதலைப் போராட்ட உணர்வை வளர்த்தெடுத்த எங்கள் காவிய நாயகன்



மூத்த தளபதியும்
விடுதலைப் புலிகளின் அனைத்துலக
பொறுப்பாளருமான

## கேணல் கிட்டு

(சதாசிவம் கிருஷ்ணகுமார்)

மற்றும்

லெப். கேணல் குட்டிசிறி

| | |
|---|---|
| மேஜர் வேலன் | கப்டன் குணசிலன் |
| கப்டன் றொசான் | கப்டன் ஜீவா |
| கப்டன் நாயகன் | லெப். தூயவன் |
| லெப். அமுதன் | லெப். நல்லவன் |

ஆகியோருக்கு எமது வீர அஞ்சலிகளை
செலுத்துகின்றோம்

தமிழர்
ஒருங்கிணைப்பு குழு
ஒஸ்லோ, நோர்வே

தமிழீழ
விடுதலைப் புலிகள்
ஸ்ருவர், டென்மார்க்

தமிழர்
ஒருங்கிணைப்பு குழு
ஸ்பான்கா, சுவீடன்

ஐக்கிய
தமிழர் அமைப்பு
லண்டன், பிரித்தானியா

உலகத்
தமிழர் இயக்கம்
ரொறன்ரோ, கனடா

தமிழர்
ஒருங்கிணைப்பு குழு
பாரிஸ், பிரான்ஸ்

தமிழர்
ஒருங்கிணைப்பு குழு
வெலிங்ரன், நியூசிலாந்து

தமிழர்
ஒருங்கிணைப்பு குழு
பலர்மோ, இத்தாலி

தமிழர்
ஒருங்கிணைப்பு குழு
டென்காக், நெதர்லாந்து

உலகத் தமிழர்
ஒருங்கிணைப்பு குழு
சூரிச், சுவிட்சலாந்து

தமிழர்
நேசக் கூட்டமைப்பு
குமஸ்யாச், ஜேர்மனி

உலகத் தமிழர்
ஒருங்கிணைப்பு குழு
நியூயோர்க், ஐக்கியஅமெரிக்கா

தமிழர்
ஒருங்கிணைப்பு குழு
மெல்பேர்ன், அவுஸ்ரேலியா

**விடுதலைப் புலிகளின் அனைத்துலகச் செயலகம்**

(7238)

---

## 1 ஆம் ஆண்டு
## ஆத்மசாந்திக் கிரியைகள்



### அமரர் திரு. வேலுப்பிள்ளை சின்னையா
அவர்கள்

(2-1-1993 கிளாலிக் கடலில் எம்மைவிட்டு மறைந்தார்)

| அன்னை மடியில்: | கடலன்னை மடியில் |
|---|---|
| 28 7-1925 | 02 01 1993 |

கீழ்கடல் தோன்றி மேல்கடல் மறையும் ஆதவன்
உலகை உய்விக்கும் தெய்வம் நீயே
மண்ணிடைத் தோன்றி கடல்வழி மறைந்தாய்
உனது வழித்தோன்றல்கள்
இதயத்திற் தெய்வமாய் கோயில் கொண்டாய்
சாந்தி சாந்தி சாந்தி

அன்னாரது முதலாண்டு நினைவும் ஆத்ம சாந்திக் கிரியைகளும் 17-1-1994 திங்கட்கிழமை (நாளை) அவரது இல்லத்தில் காலை 9 மணி தொடங்கி நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு மிக அன்புடன் அழைக்கிறோம்.


மிருசுவில் வடக்கு,
மிருசுவில்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும்
சகோதரர்கள்.

(7228)

எமது சங்க ஸ்தாபகரான தளபதி கேணல் கிட்டு அண்ணாவின்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தேகக் குருதியை மையாக்கி
தேசப் பெருமையை நிலைநாட்ட
வங்கக் கடலில் காவியம் எழுதிய
எங்கள் தளபதியே! கிட்டு அண்ணாவே!

வானம் முழுதும் தாளாகி
வையம் முழுதும் விரிந்தாலும்
மானம் காத்த இம் மறவர்
வீரம் பாடப் போதாதே.

# தளபதி கேணல் கிட்டு

(சதாசிவம் கிருஷ்ணகுமார்)

வட மாகாண ஒப்பந்தக்காரர் சங்கம்
10, செம்பியன் ஒழுங்கை,
கொக்குவில்.

(சி-8391)

(சி-8391)



# முதலாவது ஆண்டை நினைவு கொள்கின்றோம்

தங்கத் தமிழீழம் தரணியில் அமைத்திட
தளராது போராடினீர்
எங்கள் துயரதை உலகிற்குச் சொல்லிட
எட்டவே சென்று வந்தீர்
வங்கக் கடலிலே வஞ்சகர் சூழ்ந்திட
வரலாறு படைத்துச் சென்றீர்
பொங்கியே வருகின்ற உணர்வதால் உங்களை
போற்றியே நினைவிற் கொள்வோம்.

## தளபதி கேணல் கிட்டு

லெப். கேணல் குட்டிசிறி

மேஜர் வேலன் (மலரவன்)
கடற்புலி கப்டன் குணசீலன்
கடற்புலி கப்டன் றொசான்
கடற்புலி கப்டன் ஜீவா

கடற்புலி கப்டன் நாயகன்
கடற்புலி லெப். நல்லவன்
கடற்புலி லெப். தூயவன்
கடற்புலி லெப். அமுதன்

## வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்கள்,

கொத்தணிகள், சமாசம்.

(சி-8395)

### சிந்தனைக்கு

சுதந்திரமாய் இருக்க உறுதி கொண்ட மனிதன் மீது அடிமைத் தளையைப் பூட்டுவதை விட நிலையான மலையை அடியோடு பெயர்த்து அப்பால் எறிவது எளிதானது.

- றொபர்ட் பெதே


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 16-01-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05


## "கேணல் கிட்டு ஒரு தனி மனித சரித்திரம்"

இந்தியாவின் சதி நடவடிக்கை காரணமாக மூத்த தளபதி கேணல் கிட்டுவும் மற்றும் ஒன்பது போராளிகளும் வீரச்சாவடைந்த முதலாம் ஆண்டு நினைவுநாள் இன்றாகும்.


கடந்த ஆண்டு வங்கக் கடலில் நடந்த இத் துயர்மிகு சம்பவமானது, தமிழ் மக்களின் மனங்களில் இருந்தும், தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் இருந்தும் மறைந்து விடவோ, மறைத்து விடவோ கூடியதல்ல. ஏனெனில், இச்சதியில் சிக்கி வீரச்சாவடைந்த கேணல் கிட்டு தமிழீழ மக்களின் மனதில் நீங்காத இடம்பெற்ற போராளி; அவர்களின் தோழன்; மக்கள் மனதை வெற்றி கொண்டவீரன். அத்தோடு, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இராணுவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் வரலாற்றுச் சாதனை படைத்த தளபதி.

கேணல் கிட்டு யாழ் மாவட்டத் தளபதியாக இருந்த காலத்தில் புரியப்பட்ட இராணுவ ரீதியான சாதனைகள் பல. இதில், யாழ். பொலிஸ் நிலையம் மீதான தாக்குதலும், தொலைத் தொடர்பு நிலையம் மீதான தாக்குதலும் முக்கியமானவை. ஆயினும், யாழ். குடாநாட்டில் இராணுவ முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட முற்றுகையும், குடாநாட்டில் இராணுவத்தின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டமையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இராணுவ ரீதியாக மட்டுமல்ல, அரசியல் ரீதியாகவும் புதிய பரிணாமம் ஒன்றிற்கு இட்டுச் சென்றதெனலாம்.

இம் முற்றுகை மூலம், சிறிலங்கா இராணுவம் முகாம்களுக்குள் முடக்கப்பட்டதன் விளைவு தமிழீழ விடுதலைப் போராட்டம் மீட்கப்பட்ட நிலப்பரப்பு ஒன்றை கொண்டதாகப் புதிய பரிணாமம் பெற்றது. இதன் கார

# "கிட்டு ஓர் அற்புதமான இலட்சியவாதி"

# தலைவர் பிரபாகரன் புகழஞ்சலி



"அவனுள் ஓர் அபூர்வம் இருந்ததை நான் ஆரம்பத்திலிருந்தே கண்டு கொண்டேன். அது அவனது அழகான ஆளுமையாக வளர்ந்தது. ஒரு சுதந்திர வீரனுக்குரிய அனைத்துச் சிறப்பியல்புகளும் அவனிடமிருந்தன. அதனால் அவன் ஓர் அற்புதமான இலட்சிய வாதியாக வாழ்ந்தான்; போராடினான்; அனைத்து மக்களது இதயங்களையும் கவர்ந்தான். போர்க்களத்தில் வீரனாகவும், பொதுமக்களின் தோழனாகவும், எங்கும் எல்லாவற்றிலும் எல்லோரிடமும் அவனது ஆளுமையின் வீச்சு நிலைத்திருந்தது.

"மனதின் ஆழத்து உள்ளுணர்வுகளை வார்த்தைகளிற் சித்திரிப்பது கடினம். அதுவும் ஆன்மாவை உலுப்பிவிடும் ஓர் உணர்வுப் பூகம்பத்தை மனித மொழியில் விபரிக்கமுடியாது. எனது அன்புத் தம்பி கிட்டுவின் இழப்பும் அப்படித்தான். அவனது மறைவு எனது ஆன்மாவை பிழிந்த ஒருசோக நிகழ்வு. அதனைச் சொற்களால் வார்த்து விட முடியாது.

"நான் கிட்டுவை ஆழமாக நேசித்தேன். தம்பியாக, தளபதியாக, எனது சுமைகளைத் தாங்கும் இலட்சியத் தோழனாக நான் அவனை நேசித்தேன். இது சாதாரண மனித பாசத்திற்கு அப்பாலானது. ஒரே இலட்சியப் பற்றுணர்வில், ஒன்றித்த போராட்ட வாழ்வில் நாம் பகிர்ந்து கொண்ட அனுபவத்தில் ஒருவரை ஒருவர் ஆழமாக இனம் கண்ட புரிந்துணர்வில் வேரூன்றி வளர்ந்த நேயம் அது.

"கிட்டு ஒரு தனி மனித சரித்திரம், நீண்ட, ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தின் பதிவு.

வங்கக் கடலில் பூகம்பமாக அவனது ஆன்மா பிளந்தது. அதன் அதிர்வலையால் எமது தேசமே விழித்துக் கொண்டது.

"கிட்டு, நீ சாகவில்லை ஒரு புதிய மூச்சாகப் பிறந்திருக்கிறாய்"

(தலைவர் வே. பிரபாகரன் கேணல் கிட்டுவிற்கு வீர அஞ்சலி செலுத்தி கடந்த பெப்ரவரியில் விடுத்த செய்தி)



# இந்திய வல்லாதிக்கப் பேய் தளபதி கிட்டுவை சாகடித்தது!

எமது மூத்த தளபதி கேணல் கிட்டு, லெப்டினன்ட் கேணல் குட்டிசிறி உட்பட பத்து வேங்கைகளின் வீரச்சாவு தமிழீழமக்களைப் பொறுத்தவரை பேரதிர்ச்சியையும் பெருந்துயரையும் ஏற்படுத்தியுள்ள அதே வேளையில் அந்தத் துயர நிகழ்வுக்குக் காரணமான இந்திய வல்லாதிக்கத்தின் மீது கடும் சினத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பொறுத்தவரை போராளிகளின் வீரச்சாவு என்பது நாள்தோறும் நடைபெறுகின்ற நிகழ்வாக ஆகிவிட்டது. ஆயினும் இந்திய வல்லாதிக்கத்தின் சூழ்ச்சி, வஞ்சனை, அடாவடிகளினால் எமது போராளிகள் எதிர்கொண்ட வீரச்சாவுகள் தமிழீழ மக்களுக்கு துயரத்தை மட்டுமல்ல என்றும் அகலாத வெறுப்பையும் அடங்காத கடும் சினத்தையும் ஏற்படுத்துவனவாகவும் அமைந்து விட்டன.

போதும் சரி, வீடியோ கமராவுடன் நின்றாலும்சரி, புகைப்படக் கருவியுடன் நின்றாலும் சரி, சொல்லாடல்கள் பேச்சுவார்த்தைகளின் போதும் சரி, மக்களின் அன்பையும் ஆதரவையும் பெறுவதிலும் சரி அவன் தன் முயற்சியில் முழு வெற்றியைப் பெற்றிருக்கிறான்.

தொடக்கத்தில் பலதளபதிகளின் கீழ் பல களங்களில் தான் சிறந்த வீரன் என்பதை உணர்த்திக் காட்டிய தளபதி கிட்டு 1984இன் பின் போராட்டத் தளபதியாக இருந்து யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதல், தொலைத்தொடர்பு நிலையத் தாக்குதல்,

னான்.

கடுமையாக இருக்கவேண்டிய வேளைகளில் கடுமையாகவும் - அன்பு பாராட்டிய வேளைகளில் அன்பைப் பொழிவதிலும் மக்களிடம் இருக்கும் ஆற்றலை அறிந்து அவர்களை அவ்வத் துறைகளிலே செயற்பட வைத்து அவர்களின் முழுமையான ஒத்துழைப்பைப் பெறுவதிலும் தளபதி கிட்டு தன்னிகரற்றவனாக விளங்கினான்

அவன் பலரைக் கண்டித்து இருக்கிறான்; தண்டித்தும் இருக்கிறான். ஆயினும் அனைவராலும் கிட்டண்ணா என்

தமிழீழ விடுதலைப் புலி

மண்ணை-இயக்கத்தை - எவ்வாறு நேசித்தான், தன் தலைவனை எவ்வாறு மதித்துப் போற்றினான்-போராளிகளின் நலன்களில் எத்தகைய அக்கறை கொண்டிருந்தான்-தமிழீழ மக்களின் குறைகளை - இடர்களைக் களைவதில் எத்தகைய ஆர்வத்தினை-அவாவினைக் கொண்டிருந்தான் என்பதற்கு எடுத்துக் காட்டுகளாக அமைந்திருக்கின்றன. அவன் எழுதிய மடல்களைத் தொகுத்து வெளியிட்டால் அது விடுதலை இயக்கத்திற்கு - போராட்ட வீரர்களுக்கு அருங்களஞ்சியமாக அமையும்.

விடுகலைப் போராட்டத்துக்குவேண்டிய அனைத்துஆற்றல்களையும்- திறமைகளையும்-தகுதிகளையும் பெற்றிருந்த மூத்த தளபதி கேணல் கிட்டுவினதும் அவனுக்கு அருந்துணையாக நீண்டகாலம் பணியாற்றிய லெப். கேணல் குட்டிசிறியினதும் மற்றும் எட்டுப் போராளிகளினதும் இழப்பு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் விடுதலைப் போராட்டத்துக்கும் பேரிழப்பே ஆகும். எதிரிகளிடம், அடிபணியாது விடுதலைப்புலிகளின் மரபிற்கேற்ப தம்மைத் தாமே மாய்த்த இந்த மாவீரர்களை தமிழீழம் என்றும் நினைவுகூரும் அந்த மாவீரர்களுக்கு நானும் என் வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### கேணல் கிட்டு நினைவுக் கவிதை

### விடுதலை மாளிகை

தின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டமையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இராணுவ ரீதியாக மட்டுமல்ல, அரசியல் ரீதியாகவும் புதிய பரிணாமம் ஒன்றிற்கு இட்டுச் சென்றதெனலாம்.

இம் முற்றுகை மூலம், சிறிலங்கா இராணுவம் முகாம்களுக்குள் முடக்கப்பட்டதன் விளைவு தமிழீழ விடுதலைப் போராட்டம் மீட்கப்பட்ட நிலப்பரப்பு ஒன்றை கொண்டதாகப் புதிய பரிணாமம் பெற்றது. இதன் காரணமாக சிறிலங்கா அரசு இலங்கைத் தீவின் ஒரு பகுதியில் தனது இறைமையை - ஆதிக்கத்தை - இழந்ததெனலாம். இது சிறிலங்கா அரசாங்கம் அடிக்கடி வெளிப்படுத்தும் பிரதேச ஒருமைப்பாடு, ஐக்கியம், ஒற்றையாட்சி அமைப்பு என்பனவற்றை கேள்விக்குரியதாக்கிப் பலம் இழக்கச் செய்தது

இந்நிலையின், அரசியல் படிநிலை வளர்ச்சியும் தளபதி கிட்டு காலத்திலேயே ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. சிறிலங்கா அரசியல் வாதிகளுடன் பேச்சுவார்த்தை, யுத்தக் கைதிகள் பரிமாற்றம் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் அரசியலில் இரு சம அந்தஸ்துடையவர்களுக்கு இடையில் நடந்தேறியவை போன்று இடம்பெற்றன. இது இரு அரசுகளுக்கு இடையிலானது போன்ற வடிவத்தைக் கொடுத்தது.

இவ்வாறாக, தமிழீழ விடுதலைப் போரில் புதிய ஒரு பரிணாமத்தையும் விடுதலைப் புலிகளுக்கென ஒரு பெரும் தளத்தையும் விரிவுபடுத்திய தளபதி பற்றி ''கிட்டு ஒரு தனிமனித சரித்திரம். நீண்ட ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தின் பதிவு'' எனத் தலைவர் பிரபாகரன் கூறியுள்ளமை முற்றிலும் பொருத்தப்பாடானதொன்றே.

இவ்வாறான புகழ் பூத்த தளபதியை இந்தியா சாகடித்தமையானது, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக அது ஆற்றிவரும் தொடர் நடவடிக்கையின் ஒரு அம்சமே ஆகும். அதாவது, லெப். கேணல் திலீபனைச் சாகடித்ததுடன் ஆரம்பித்த இந்தியாவின் துரோகத்தனமானது, கேணல் கிட்டு வரை தொடர்ந்தது என்றே கூற முடியும்.

இதேவேளை, கேணல் கிட்டுவை இந்தியா சாகடித்த நிகழ்ச்சியானது விடுதலைப் புலிகளுக்கு இந்தியா கொடுக்க நினைத்த அடி என முடிவுசெய்வது தவறு இது இலங்கையில் சமாதான சூழ்நிலை ஒன்று உருவாகிவிடக் கூடாது என்ற இந்தியாவின் குறிக்கோளின் அடிப்படையிலானது. தளபதி கிட்டு சமாதான முயற்சிகளை மேற்கொண்டே யாழ்ப்பாணம் நோக்கிச் செல்கின்றார் எனத் தெரிந்திருந்தும் இந்தியா மேற்கொண்ட முயற்சியானது இதனையே வெளிப்படுத்துவதாக இருந்தது.

அதாவது, இந்தியா விடுதலைப் புலிகளுக்கு எதிரான கொள்கை கொண்டுள்ளது என்பது மட்டுமல்ல, தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கும், ஏன் இலங்கையில் அமைதிக்கும் விரோதமாகவேசெயற்படுகின்றது என்பதே நிதர்சனமாகும். தோல்வியுடன் இந்திய இராணுவம் வெளியேறிய பின்னரும்கூட கிட்டுவை இந்தியா சாகடித்தது இதன் வெளிப்பாடே ஆகும். ஆனால், உலகப் பெரும் வல்லரசுகளே தேசிய இனங்களின் எழுச்சியினால் தமது சாம்ராச்சியங்கள் சிதைந்ததைக் கண்ணால் கண்டும் தடுத்து விட முடியாமல் போனது பழைய வரலாறுகள் அல்ல. அண்மைய அரசியல் நிகழ்வுகள் ஆகும்.

வஞ்சனை, அடாவடிகளினால் எமது போராளிகள் எதிர்கொண்ட வீரச்சாவுகள் தமிழீழ மக்களுக்கு துயரத்தை மட்டுமல்ல என்றும் அகலாத வெறுப்பையும் அடங்காத கடும் சினத்தையும் ஏற்படுத்துவனவாகவும் அமைந்து விட்டன.

இந்திய வல்லாதிக்க அரசின் சூழ்ச்சி, வஞ்சனை வலைகளில் சிக்கி எமது வீரத் தளபதிகள், லெப். கேணல் திலீபன், லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன், லெப். கேணல் ஜொனி எனப் பல வீரர்கள் வீரச்சாவை அணைத்துக் கொண்டுள்ளனர். அதனை அடுத்து தற்போது கேணல் கிட்டுவும், மேலும் ஒன்பது வீரர்களும் இந்திய அரசின் அடாவடித்தனத்தினால் கப்பலைத் தகர்த்து தமது இன்னுயிரைத் துறந்து வீரச்சாவைத் தழுவியிருக்கின்றனர்.

தலைவர் பிரபாகரன் மீது பேரன்பும், பெரு மதிப்பும் கொண்ட மூத்த தளபதி கேணல் கிட்டு தன்னை விடுதலைப்புலிகள் இயக்கத்தில்- விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக் கொண்ட நாளிலிருந்து கடந்த பதினைந்து ஆண்டுகளாக தான் மேற்கொண்ட அனைத்து செயற்பாடுகளிலும் அவை அரசியல் செயற்பாடுகளாகட்டும், இராணுவச் செயற்பாடுகளாகட்டும், கலை, இலக்கிய தொழில் நுட்பத் துறைகளிலாகட்டும், தன் தனித்திறமையைக் காண்பித்து அவற்றில் தனி முத்திரை பதித்து இருக்கின்றான்.

அவன் களத்தில் போர்க் கருவிகளுடன் நிற்கும் போதும் சரி- எழுது கோலைக் கையில் ஏந்தி கட்டுரைகள் தீட்டும்

தொடக்கத்தில் பலதளபதிகளின் கீழ் பல களங்களில் தான் சிறந்த வீரன் என்பதை உணர்த்திக் காட்டிய தளபதி கிட்டு 1984இன் பின் போராட்டத் தளபதியாக இருந்து யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதல், தொலைத்தொடர்பு நிலையத் தாக்குதல், கோட்டை இராணுவமுகாம் முற்றுகை, பலாலிஆனையிறவு இராணுவ முகாம்கள் மீதான முற்றுகைகள் என அவன் நடாத்திய பல்வேறு வெற்றிகரமான இராணுவ நடவடிக்கைகள்தான் சிங்களப்படைகளை முகாம்களுக்குள் முடங்க வைத்துயாழ் குடாநாட்டு மண்ணை எமது முழுக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது.

இயக்கத்தின் கொள்கைகளை - போராட்டத்தின் நிகழ்வுகளை - மக்களிடையே பரப்புவதற்காக V. D. Oவை ஊடகமாகக்கையாள்வதில் கிட்டுவழங்கிய அறிவுரைகள்- எண்ணங்கள் பெரிதும் பயன்பட்டன.

களத்தில் செய்தி இதழிலும் தமிழகத்தின் வார இதழ்களிலும் அவன் எழுதிய கட்டுரைகள் எமது போராட்டத்தின் நியாயத்தை உலகுக்கு உணர்த்துவதாக- வெளிப்படுத்துவதாக அமைந்தன.

சிங்கள இராணுவத் தளபதிகளுடனும், சிங்கள அரசியல் தலைவர்களோடும் பௌத்த மத குருமார்களோடும் இந்திய உளவுத் துறையினருடனும் பல்வேறு காலங்களில் அவன்நடாத்திய சொல்லாடல்கள்-பேச்சுவார்த்தைகளின் போது தான் கொண்ட நிலையை உறுதியாக - அழுத்தமாக வற்புறுத்தி அரசியலில் தனக்கு இருந்த ஆற்றலை வெளிப்படுத்தி

ழைப்பைப் பெறுவதிலும் தளபதி கிட்டு தன்னிகரற்றவனாக விளங்கினான்

அவன் பலரைக் கண்டித்து இருக்கிறான்; தண்டித்தும் இருக்கிறான். ஆயினும் அனைவராலும் கிட்டண்ணா என்

> தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த தளபதியும், மத்திய குழு உறுப்பினருமாகிய கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளினதும் வீரச்சாவு குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. இளங்குமரன் புலிகளின் குரல்வானொலியில் கடந்த ஆண்டு ஜனவரி 17-ம் திகதியன்று ஆற்றிய உரை.

றும், கிட்டு மாமா என்றும் பாசம் பொங்க அழைக்கப்பட்டான். அவன் அனைத்து துறைகளிலும் வல்லவனாகத் திகழ்ந்தான். அவன் அறியாத துறைஒன்றும் இருக்கவில்லை. அவன் அறியாத ஒன்றுஇருக்குமாயின் அச்சம் தான்அவன் அறியாததொன்று. படைவலு, ஆள் எண்ணிக்கை, மக்கள் ஒத்துழைப்பு தற்பொழுது இருப்பதை விட குறைவாக இருந்த காலத்திலே தான் தளபதி கிட்டு அருஞ் செயல்கள்பலவற்றைப்புரிந்து இருக்கின்றான்,

அவனது செயல்கள் பெரும் வெற்றி பெற்றமைக்கு அவனிடம் நிறைந்து இருந்த அஞ்சாமை உணர்வுதான் பெரும்காரணமாகஅமைந்தது

1989-ம் ஆண்டின் பின் வெளிநாடுகளில் இருந்து இயங்கிக் கொண்டிருந்த வேளையில் அவன் எழுதிய மடல்கள் ஒவ்வொன்றும் அவன் தன்

தான் என்பதற்கு எடுத்துக் காட்டுகளாக அமைந்திருக்கின்றன. அவன் எழுதிய மடல்களைத் தொகுத்து வெளியிட்டால் அது விடுதலை இயக்க

ர்களை தமிழீழம் என்றும் நினைவுகூரும் அந்த மாவீரர்களுக்கு நானும் என் வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கேணல் கிட்டு நினைவுக் கவிதை

### விடுதலை மாளிகை

வல்லையின் மல்லிகை
வேங்கையின் களத்தில்
வெற்றிகள் குவித்த
விடுதலை மாளிகை.

செம்பாட்டு கற்களிலும்
கடலோர மணலிலும்
இலந்தை முட்களிடையே
எம்நாடு மலர்வதற்கு
புறநானூறு ஆகிய
புதுநிலா

சுதந்திர தேவியை
காதல் செய்து
காத்து வாழ்ந்த
கடலின் காவியம்.

பௌர்ணமி நதியாய்
மக்கள் நெஞ்சங்களில்
குடியிருக்கும் கோயில்.

வானொலி அலைபோல்
தமிழீழ மீட்பிற்காக
உலகெலாம் பறந்த
தமிழ்ப் புறா.

கடலோர முட்களால்
நல்ல நெற்கதிர்களின்
நடுவே வளர்ந்த
புல்லுகளால்
தீக்குள் தீயான
தமிழீழ விளக்கு.

கேணல் கிட்டு
வாழ்வில் சிந்திய
வாழ்வின் பணி+யை
வரலாறாகித் தொடர்வோம்.

- புலேந்தி திலீப்காந்த்

# மறப்போம் மன்னிப்போம் என்ற முடிவுக்கு தொண்டா வரவேண்டும்

## செல்லச்சாமி கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் உள்ள அரசியல் தலைவர்களில் தொண்டமான் மூத்த தலைவர். அவர் தனது அரசியல் ஞானத்தை, அனுபவ முதிர்ச்சியை பயன்படுத்தி, பிரச்சினைக்குரிய எட்டு மாகாணசபை உறுப்பினர்கள் தொடர்பாகவும் மறப்போம், மன்னிப்போம் என்ற முடிவிற்கு வரவேண்டும். அத்தகைய முடிவு அவர் எடுக்கும் பட்சத்தில் நான் எனது சட்ட நடவடிக்கைகளை விலக்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சி பொதுச் செயலாளரும், அமைச்சருமான செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

53 ஆண்டுகளாக தலைவரும், 45 ஆண்டுகளாக நானும் இணைந்தேகாங்கிரஸ் தாபனத்தை வளர்த்தோம். பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டபோதும் இருவரும் இணைந்தேஅதற்கு முகம் கொடுத்தோம். அப்படியான எமக்கு பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வது கடினமல்ல என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

## இந்தியாவே தலைகுனி வெட்கத்தில்!

அமைதி தேடி வந்தாயோ வங்கத்தில்
தாயகம் வருமுன் பக்கத்தில்
இந்தி அதிகார கொட்டத்தில்
மறைந்ததுவோ இளம்பருதி வங்கத்தில்
சர்வதேச கடல் விட்டத்தில்
பிடிக்க அதிகாரம் உண்டோ உன் சட்டத்தில்
மறவர்களை சுற்றி வளைத்த நேரத்தில்
ஏளனமாய் சிரித்திருப்பர் வீரத்தில்
கப்பலது வெடித்த கணத்தில் - உன்
ஆணவம் சிதறியது அண்டத்தில்
இந்தியாவே தலைகுனி வெட்கத்தில் - உன்
கொடி பறக்கவோ இந்திய உப கண்டத்தில்
அதை பாய்ந்து பிய்த்திடும் புலி ஈழத்தில்.

ஆக்கம்: நாவலன்

# ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் கொழும்பு நகரப் பொலிசாரால் கைது

(கொழும்பு)

தமிழ் இளைஞர்கள், யுவதிகளை கைது செய்யும் நடவடிக்கைகள் மீண்டும் கொழும்பில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஒருவார காலத்தில் சுமார் ஆயிரத்திற்கும் அதிகமானோர் கொழும்பு நகரப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாளிகாவத்த, கொட்டாஞ்சேனை, புறக்கோட்டை, மருதானை ஆகிய பொலிஸ் பிரிவுகளிலேயே அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆண், பெண் வித்தியாசமின்றி அனைவரும் கைது செய்யப்படுகின்றனர் என்று கொழும்பு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பகலிலும், இரவிலும் பொது இடங்களில் வைத்து பல தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களின் நிலை பற்றி இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

பொலிசாரின் இந்நடவடிக்கையினால் கொழும்பில் வாழும் தமிழர்கள் மத்தியில் பீதி நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## நான்கு கால்களுடன் கண்டியில் குழந்தை

(கொழும்பு)

அதிசய ஆண் குழந்தை ஒன்று கண்டி வைத்தியசாலையில் பிறந்துள்ளது. சில தினங்களுக்கு முன்னர் குறிப்பிட்ட வைத்தியசாலையில் நாகுன் கால்கள், நான்கு கைகளுடன் ஆண் குழந்தை பிறந்தது.

இக்குழந்தை பிறந்தவுடனேயே இறந்துவிட்டது என வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

அங்கும்பற பிரதேசத்தைச் சேர்ந்த தாய் ஒருவரே இந்தக் குழந்தையைப்பெற்றுள்ளார்.

## வழிப்பறியில் ஈடுபட்ட தப்பி ஓடிய சிப்பாய் கைது

(கொழும்பு)

இரண்டு வருடங்களுக்கு முன்னர் வவுனியா இராணுவ முகாமிலிருந்து தப்பியோடிய இராணுவ சிப்பாய் ஒருவர் அனுராதபுரத்தில் ஆயுதத்துடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

அனுராதபுரத்தில் அண்மையில் இடம்பெற்ற வழிப்பறிக் கொள்ளைகள் குறித்து புலன் விசாரணை செய்து வரும் அனுராதபுரம் பொலிசார் கமலசிறி என்ற பிரஸ்தாபநபரைக் கைது செய்து விசாரித்தபோது அவர் வவுனியாவிலிருந்து தப்பி ஓடிய இராணுவச் சிப்பாய் என்று தெரிய வந்தது.

இவரது நான்கு சகாக்களும் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து துப்பாக்கிகளும் ரவைகளும் கைப்பற்றப்பட்டன என பொலிசார் தெரிவித்தனர்.

## நூல் வெளியீட்டுவிழா

''எமது போராட்டமும் தற்சார்புப் பொருண்மியமும்'' எனும் நூல் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் நினைவாக இன்று காலை 10.00 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக்கொள்கின்றது.

## "மாகோ" புறப்பட்டது

(வடமராட்சி)

பருத்தித்துறை இறங்குதுறையில் மா இறக்கி முடித்த 'மாகோ' கப்பல் நேற்று மாலை திருக்கோணமலை நோக்கிப் புறப்பட்டது. இக்கப்பலில் சிறுவர்கள் உட்பட 44 பயணிகள் செல்கின்றனர். யாழ். பிரதான தபாலகம் இக் கப்பல் மூலம் 38 தபால் பொதிகளை அனுப்பி வைத்துள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மூளைக்காய்ச்சல் நோயாளி ஒருவரும் இக் கப்பல் மூலம் கொழும்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். (யோ)

# மலையக மக்களின் உரிமைகளை இந்தியா - சிறிலங்கா பலியிட்டன!

## அமைச்சர் தொண்டமான் குற்றச்சாட்டு

சர்வஜன வாக்குரிமை- ஒருவருக்கு ஒருவாக்கு 1930களில் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது அன்று முதல் சிறிலங்காவில் உள்ள பெரும்பான்மை இனத் தலைமை இன அடிப்படையில் பிரித்தாளும் முறையில் பிரச்சினைகளை அணுகுவது துரதிஷ்டமானது குறிப்பாக, இந்திய வம்சாவளி மக்களுடனான உறவுகளில் பாதகமான அணுகுமுறையையே பின்பற்றுகிறார்கள் இந்த வகையில் இந்திய அரசையும் தமது நன்மை கருதியே பயன்படுத்தியுள்ளார்கள் பாஜ்பாய்-டி எஸ் சேனநாயக்கா பேச்சுவார்த்தைகள், தொடர்ந்தாற் போல் சிறிமாவோ-சாஸ்திரி உடன்படிக்கைகளில் இந்தியா தணிந்து போயுள்ளது

சம்பந்தப்பட்ட மக்கள், அவர்களது உரிமைகளைப் பலியிடுவதன் மூலம் இரு அரசுகளுக்கும் இடையிலான உறவே மேலாகக் கருதப்பட்டது. இதன் விளைவு, இந்திய வம்சாவளியினர் பெருமளவில் நாடற்ற பிரசைகளாக்கப்பட்டனர். இவ்வாறு அமைச்சர் எஸ். தொண்டமான் புறண்ட் லைன் சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியில் கூறியுள்ளார்.

பாஜ்பாய் - டி. எஸ் சேனநாயக்காபேச்சுவார்த்தைகள் மற்றும் சிறிமாவோ - சாஸ்திரி உடன்படிக்கைகளின் போதும் இந்திய அரசு மக்கள் பிரதிநிதிகளைத் தள்ளிவைத்தது. மக்கள் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டு தமது பங்களிப்பைச் செய்ய இடமளிக்கப்படவில்லை.

இப்போது சிறிலங்கா அதிகார வர்க்கம் மறுபடியும் இனவாத அணுகுமுறையைப் பின்பற்றுகிறது ஆகவே அரசுடன் உறவுகளைப் பேணுவதில் கஷ்டங்கள் உள்ளன எதிர்க்கட்சித் தலைமை நடைமுறைச்சாத்தியமான அணுகுமுறையைக் கொண்டுள்ளது சிறிலங்காவின் தேசியப்பிரச்சினையை இன அடிப்படையில் அணுகாமல் தேசிய நன்மை கருதி அணுகும் கட்சிகளுடன் நான் தொடர்பு கொண்டுள்ளேன் என்று அந்தப் பேட்டியில் அவர் தெரிவித்துள்ளார்

சில அதிகாரிகள், அதிகார வர்க்கம் சிறிலங்காவில் உள்ளது. இனப்பிரச்சினை அன்று. அது பயங்கரவாதப் பிரச்சினை என்று ஜனாதிபதியை வழிநடத்துகிறார்கள். இனப்பிரச்சினையை ஒரு இராணுவப்பிரச்சினையாக முன்வைக்கிறார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

# தமிழகக் கரையோரங்களில் பொலிஸ் பாதுகாப்பு தீவிரம்

## புலிகள் ஊடுருவலைத் தடுக்க ஏற்பாடு

(சென்னை)

தமிழக கடலோரப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் ஊடுருவலைத் தடுக்க மாநில அரசின் உத்தரவின் பேரில் பொலிஸ் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என தமிழக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கடலோர கிராமங்களில் வீட்டுக்கு வீடு விடுதலைப் புலிகளை தேடும் பணி நடைபெற்றுவருகிறது.

கடற்கரைப் பகுதிகளின் நுழைவிடங்களிலும் எல்லைப் பகுதிகளிலும் சுங்கச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. மதுரை அருகே ஏழு இடங்களில் சுங்கச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிலைகளிலும் சப் இன்பெக்டர், 15 பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோர் ஏ கே-47 துப்பாக்கிகளுடன் நிறுத்தப்பட்டுள்ளதாக தமிழக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. புலனாய்வுத்துறைக்கு கிடைத்த தகவலின்படி இப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது

இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமேஸ்வரம் காயல்புரி, மண்டபம் அகதி முகாம் என்பவற்றில் தமிழக பொலிசார் நேற்று திடீர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

தமிழகத்தில் விடுதலைப் புலிகள் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தலாம் என்பதால் பொலிஸ் ரோந்து அதிகரிக்கப்பட்டுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவித்தன.

### தளபதி

இவற்றை விட வீதிகள் தோறும் அஞ்சலி நிகழ்வுகளுக்கு அறைகூவல் விடுக்கும் பதாகைகள் ஒரு புறம், சிவப்பு, மஞ்சள் வர்ணத் தோரணங்களின் அலங்காரம் மறுபுறம். விடுதலைப்போராட்டத்தின் பரிணாமம் குறித்தும் போராட்டத்தில் மேற்படி பத்து வேங்கைகளினதும்

### தமிழக

திருநாவுக்கரசு மற்றும் ராஜாராம், எஸ்.ஆர். ராதா ஆகியோரைக்கொண்ட அணியினர் தஞ்சாவூரில் இன்று ஏற்பாடு செய்திருந்த எம். ஜி. ஆர், பிறந்த நாள் விழாவில் ஆளுநர் சென்னா ரெட்டி கலந்துகொள்வதாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### தானியம் பயிரிடல்

நெல் வயல்களில் அறுவடை முடிந்தவுடன் இலகுவாக செய்கை பண்ணக்கூடிய குறுகிய கால பயிர்களான எள்ளு, பயறு, கௌபி ஆகிய சிறுதானியங்களை பயிரிடத் தயாராகுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்திக்

# பச்சிலைப்பள்ளி பகுதியில் மலேரியா பரவும் அபாயம்

## ஒருவாரத்தில் ௯9 பேர் பீடிப்பு

(தென்மராட்சி)

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் மலேரியா நோய் தீவிரம் அடைந்துள்ளது. பளை அரசினர் வைத்தியசாலையில் ஒருவாரத்தில் 99 மலேரியா நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என அவ் வைத்தியசாலை வட்டாரங்கள் கூறுகின்றன. இந்நோயினால் மேலும் பலர் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக அவ்வட்டாரங்கள் கூறுகின்றன.

இவ் வைத்தியசாலைக்கு செம்பியன்பற்று, இயக்கச்சி, மாசார், மருதங்கேணி, எழுதுமட்டுவாள் பிரதேசங்களில் இருந்து சிகிச்சைபெறவென பெருமளவு நோயாளிகள் வருகின்றனர். இவ்வைத்தியசாலையில் மலேரியா இரத்தப் பரிசோதனையில் ஈடுபட்டு வரும் நுண்கருவியலாளர் க. சிவப்பிரகாசம் அவர்கள் கூறுகையில் கடந்த வாரம் 490 பேருக்கு மலேரியா இரத்தப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்களில் 99 பேர் மலேரியாவிற்கு இலக்காகியுள்ளனர் எனக்கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்த வைத்திய அதிகாரி கிராமப்புறங்களில் வெள்ளம் வற்றாமையினால் அங்கு நுளம்புப் பெருக்கம் ஏற்பட்டுள்ளதாகவும், மலசல யோன் இன்மையும் இந்நிலைமைக்குக் காரணம் என்றும் கூறினார்.

இவ்வைத்தியசாலையின் விடுதி மலேரியா நோயாளிகளால் நிரம்பியுள்ளது. பலர் விடுதி விறாந்தைகளில் படுத்திருப்பதை அவதானிக்க முடிந்தது. இவ்வைத்தியசாலையில் நாளாந்தம் சுமார் 275 நோயாளர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சென்ற ஆண்டில் இவ்வைத்தியசாலை விடுதியில் மொத்தம் 3100 பேர் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர் எனவும் 62,000 பேர் வெளிநோயாளராக சிகிச்சை பெற்றுள்ளனர் எனவும் வைத்தியசாலை பதிவுகளிலிருந்து தெரியவருகிறது,

இதேவேளை இவ்வைத்தியசாலையில் வைத்தியர்களும், ஊழியர்களும் காலநேரம் பொருட்படுத்தாது சேவையாற்றிவருவதை அவதானிக்க முடிந்தது. (86)

கைலாசபதி கலையரங்கில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக் கொள்கின்றது.

துள்ளது.

யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த மூளைக்காய்ச்சல் நோயாளி ஒருவரும் இக் கப்பல் மூலம் கொழும்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். (யோ)


# கலந்து கொள்ளவும்

அன்புடையீர்!

சுன்னாகம் வர்த்தக சங்கத்தினரால் சுன்னாகம் சந்தியில் தளபதி கேணல் கிட்டுவின் திருவுருவப்படம் திரைநீக்கம் செய்து வைக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு சகல வர்த்தகர்களையும், ஊழியர்களையும், பொதுமக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்

(சி-8397) வர்த்தக சங்கம்


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

15-01-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 241

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-0560, 24-0336, 41-8068, 26-5725, 42-0999
26-6361, 26-6568, 24-1983, 26-1495, 27-0977
26-2297, 40-7299, 28-1110, 26-6983.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-4465, 42-0969, 24-3897, 26-6984, 41-7297
24-0878, 41-9659, 42-3945, 24-3071, 24-1250
27-5217, 26-5760, 24-1259, 41-8467, 42-3495
41-8629, 28-4367, 24-8353, 41-8449, 40-2573
42-2355, 32-3887, 26-4501, 24-4108. 27-9327
26-6309, 41-9989.


# மாருதி வீடியோ விஷன்

பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.

எமது புதிய வெளியீடுகள்

- முதல் உதயம் (அர்ஜுன் - சுமா)
- இப்படி இருக்கவேணும் பொம்பிள
- ரவுடி ராஜ்யம் (கிருஷ்ணா - ராதிகா)
- தர்ம பூமி (பாலகிருஷ்ணா - சோபனா)
- சீதா கீதா (ஆனந்த்பாபு - ராதா, ஜனகராஜ் - செந்தில்)
- HOT SPOTS - 2 (தாக்குதல் சித்திரம்)

சிறந்தமுறையில் புதிய பழைய திரைப்படப் பாடல்கள் ஓடியோ பதிவு செய்து கொடுக்கப்படும்.

CD (கொம்பாக்ற் டிஸ்க்) இல் புதிய பாடல்கள் வெளியாகி உள்ளன. (7248)


இவற்றை விட வீதிகள் தோறும் அஞ்சலி நிகழ்வுகளுக்கு அறைகூவல் விடுக்கும் பதாகைகள் ஒருபுறம், சிவப்பு, மஞ்சள் வர்ணத் தோரணங்களின் அலங்காரம் மறுபுறம். விடுதலைப்போராட்டத்தின் பரிணாமம் குறித்தும் போராட்டத்தில் மேற்படி பத்து வேங்கைகளினதும் பங்கு, பணி குறித்து எடுத்து விளக்கும் வாசகங்களைக் கொண்ட சுவரொட்டிகள் இன்னொரு புறமாக அனைத்து பகுதிகளிலும் பத்து வேங்கைகளுக்கு அஞ்சலி செலுத்தும் அம்சங்களை அவதானிக்கக் கூடியதாகவுள்ளதாக ஆங்காங்கிருந்து எமது பிராந்திய செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

யாழ். நகரப் பகுதியில் குளமொன்று வங்கக் கடலின் மாதிரி அமைப்பைப் பெற்றுவிட்டது. பத்து வேங்கைகளும் பயணம்செய்த ''அகத்'' என்ற கப்பலின் மாதிரி அமைப்பு மிதந்து கொண்டிருக்கிறது. பத்து வேங்கைகளதும் உருவப்படங்கள் இம் மாதிரிக் கப்பலில் வைக்கப்பட்டு. மாலைகள் சூட்டி மக்கள் அஞ்சலிக்காக விடப்பட்டுள்ளது இக் கப்பலிலும், இக் குளத்தைச் சூழவுள்ள பகுதிகளிலும் மின் அலங்காரங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த வங்கக் கடலின் மாதிரியையும் வேங்கைகளினதும் மாதிரிக் கப்பலையும் நூற்றுக்கணக்கான மக்கள் சென்று பார்த்த வண்ணமுள்ளனர். இதே போன்றதொரு மாதிரிக் கப்பல் வடமராட்சிப் பகுதியில் நீர்த்தேக்கத்திலும் மிதக்கவிடப்பட்டுள்ளது. இங்கும் நூற்றுக்கணக்கான மக்கள் சென்று பார்த்தவண்ணமிருந்தனர்.

மேலும் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள சனசமூக நிலையங்கள், மாதர்சங்கங்கள், மற்றும் பொதுமக்கள் அதிகளவில் கூடும் பொதுசன மையங்கள் ஆகிய இடங்களில் அலங்கரிக்கப்பட்ட நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப் பந்தல்களில் பத்து வேங்கைளினதும் உருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன. இப்படங்களுக்கு மக்கள் சென்று அஞ்சலி செலுத்துவதற்கான சகல முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (க), (யோ)

திருநாவுக்கரசு மற்றும் ராஜாராம், எஸ்.ஆர். ராதா ஆகியோரைக் கொண்ட அணியினர் தஞ்சாவூரில் இன்று ஏற்பாடு செய்திருந்த எம். ஜி. ஆர், பிறந்த நாள் விழாவில் ஆளுநர் சென்னா ரெட்டி கலந்துகொள்வதாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆளுநர் மீது விடுதலைப் புலிகள தாக்குதல் நடத்தலாம் என புலனாய்வுத்துறையினர் எச்சரித்திருந்ததாக இந்திய வானொலி தெரிவித்தது.

## பிரதமர்

பின் சீர்திருத்தங்கள் பற்றிய தெரிவுக்குழுவிற்கு விடுதலைப் புலிகள் தமது முறைபாடுப்களைத் தெரிவிக்க முடியும்.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் நடைபெறும்யுத்தத்தை நிறுத்தி வைக்கும் ஆரம்ப நடவடிக்கையாக பாராளுமன்ற தெரிவுக்குழுவின் சிபார்சுகளை கொள்கையளவில்ஏற்பதென அரசு தீர்மானித்துள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இரு தனித்தனியான நிர்வாகப்பிரிவுகளாக இயங்க வேண்டும் என்பது போன்ற தெரிவுக்குழுவின் அடிப்படை சிபார்சுகளை அரசு ஏற்கும்.

ஜனாதிபதி விஜேதுங்க பதவி ஏற்றபின் அரசியல் தீர்வு காண அரசு அக்கறை இல்லாது இருப்பதாக புலிகள் வதந்தி பரப்பி வருகின்றனர். அரசியல் தீர்வு மூலம் சமாதானத்தை நிலைநாட்ட அரசு முயற்சி எடுத்து வருகிறது. மொழிப்பிரச்சினை, வேலைவாய்ப்பு போன்ற பிரச்சினைகள் அனைத்தும் தீர்த்து வைக்கப்பட்டன. மாகாணசபைகள் மூலம் அதிகாரபரவலாக்கம் இடம் பெற்று வருகிறது.

வடபகுதிக்கு உணவுப் பொருள்களும், ஏனைய உதவிகளும் பொருட்செலவிலும், ஆட்பல உதவியுடனும் தொடர்ந்து மேற்கொள்ளப் படுமானால் சமாதான தீர்விற்கான வழியைப் பின்பற்றுவது அரசின்அதிமுக்கிய குறிக்கோளாக இருக்கும் எனவும் பிரதமர் ரணில் குறிப்பிட்டார். இவ்வைபவத்தில் உயர் கல்வி அமைச்சர் அநுரா பண்டாரநாயக்காவும்கலந்து கொண்டார்.

## தானியம் பயிரிடல்

நெல் வயல்களில் அறுவடை முடிந்தவுடன் இலகுவாக செய்கை பண்ணக்கூடிய குறுகிய கால பயிர்களான எள்ளு, பயறு, கௌபி ஆகிய சிறுதானியங்களை பயிரிடத் தயாராகுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்திக் குறிப்பொன்றின் மூலம் தமிழீழத்தின் விவசாய பெருமக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது

இக்காலத்தில் எம். ஐ 4. ரி. 77 ஆகிய பாசிப்பயறு வர்க்கங்களையும் எம். ஐ. 35 பம்பாய் ரககௌபி இனங்களையும், எம். ஐ 1, எம் ஐ 2 யும். ஐ 3ரக எள் இனங்களையும் இலகுவாகப் பயிரிடமுடியும்.

## கடற் படை

மற்றும் திக்கத்தில்ம சரோஜினிதேவி, த. பாக்கியம், பொலிகண்டியில் செ. செல்வமனோகரன், கு.மதுரநாயகம்: பொலிகண்டி குடியேற்றத் திட்டத்தில் சிவலிங்கம், ம.கோணேஸ்வரலிங்கம் கந்தசாமி அருமைநாயகம், மற்றும் சிலரது வீடுகளும் சிறுசேதமடைந்தது, பொலிகண்டி கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த ச. ரவீந்திரன் க. பாபு, க கண்ணன் ஆகியோர் ஒருவாறு ஆபத்தின்றி கரையை வந்துசேர்ந்தனர்.

வல்வெட்டித்துறைப்பகுதிக் கடலில் வைத்து தாக்கியதில் அங்கு ஒரு கட்டுமரம் சேதமடைந்தது கடற்படையினர் அரை மணி நேரம் பரவலாக தாக்கிவிட்டு காங்கேசன் துறைக்கு இரண்டு டோறா விசைப்படகுகளுடன் திரும்பிச் சென்றனர், (யோ)

## ஒருபிரபா

நான் முன்பு ஒரு திட்டத்தை முன்வைத்தேன். எல்லாக் கட்சிகளுக்கும் அரசுக்கு மாத்திரமல்ல எதிர்க்கட்சிகளும் ஏற்றுக்கொள்ளும் வகையில் அந்தத் திட்டத்திலிருந்து மேலும் தொடரலாம். இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

லாளர் க. சிவப்பிரகாசம் அவர்கள் கூறுகையில் கடந்த வாரம் 490 பேருக்கு மலேரியா இரத்தப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்களில் 99பேர் மலேரியாவிற்கு இலக்காகியுள்ளனர் எனகண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதுகுறித்து கருத்துத் தெரி வெளிநோயாளராக சிகிச்சை பெற்றுள்ளனர் எனவும் வைத்தியசாலை பதிவுகளிலிருந்து தெரியவருகிறது,

இதேவேளை இவ்வைத்திய சாலையில் வைத்தியர்களும், ஊழியர்களும் காலநேரம் பொருட்படுத்தாது சேவையாற்றிவருவதை அவதானிக்க முடிந்தது. (86)

# ஜனநாயகக்கொள்கைஏதும் சுதந்திரக்கட்சியில் இல்லை

### அநுரா தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி புதைகுழிகளைத் தோண்டி வருகிறது. சந்திரிகா குமாரணதுங்கா அப் புதைகுழிகளிலிருந்து 300 எலும்புக்கூடுகளைக் கண்டுபிடித்ததாகச் சொல்லி வருகிறார். ஆனால் 7 எலும்புக்கூடுகள் அங்கு காணப்பட்டதாகப் பொலிஸ் கூறுகிறது.

இவ்வாறு உயர் கல்வி அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனநாயகக் கொள்கை எதுவுமே இன்று சுதந்திரக் கட்சியில் இல்லை. இதனால் அந்தக் கட்சி பலவீனம் அடைந்துள்ளது. இன்று சுதந்திரக் கட்சிக்குள் கழுத்தறுப்பு வேலைகளும், சதிவேலைகளும் நடைபெற்று வருகின்றன.

சுதந்திரக் கட்சிக்கு எதிர்காலம் இல்லை, அதன் தவறான செயற் திட்டங்களினால் மக்கள் துன்பமடைகின்றனர். மக்களை ஏமாற்றும் வேலைகளில் அவர்கள் ஈடுபடுகின்றனர்.

எனது பட்டப்படிப்பைக்கூட இடை நிறுத்திக் கொண்டு கடந்த 23 வருடகாலமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியைக் கட்டிக்காத்து வந்தேன் என்றார்,

# அணுஆயுத ஒழிப்புக்கு உக்ரெயின் இணக்கம்

(மொஸ்கோ)

உக்ரெயின் நாட்டின் அனைத்து அணுஆயுதங்களையும் ரஷ்யாவிடம் ஒப்படைக்கவும் ரஷ்யா இவற்றை அழிக்கவும் வழிவகுக்கும் முக்கிய ஒப்பந்தம் ஒன்று நேற்றுமுன்தினம் மொஸ்கோவில் கையெழுத்தானது. இதில் உக்ரெயின் ஜனாதிபதி, ரஷ்ய ஜனாதிபதி ஜெல்சின், அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் ஆகிய மூவரும் கையெழுத்திட்டனர்.

உலகில் அதிகஅணு ஆயுதம் கொண்ட மூன்றாவது பெரிய நாடான உக்ரெயின் தன்னை அணு ஆயுதமற்ற நாடாக மாற்ற முன்வந்திருப்பது குறித்து கிளின்ரன் பாராட்டுத் தெரிவித்தார். இன்னும் 10 மாதத்தில் உக்ரெயினிடம் உள்ள மிக ஆபத்தான அணு ஆயுதமான எஸ். எஸ்.-24 எனப்படும் 176 ஏவுகணைகளையும் ரஷ்யாவுக்கு எடுத்துவரப்பட்டு அழிக்கப்படும். மேலும் 1300 அணுக்குண்டுகள் ரஷ்யாவுக்கு எடுத்துவரவும்இந்த ஒப்பந்தம் வழிசெய்கிறது

உக்ரெயின் ஜனாதிபதி நாட்டுக்குத்துரோகம் செய்துவிட்டதாக பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டித்துள்ளனர்.


தரமானபோட்டோஸ்ரட்பிரதிகளுக்குஇளந்தென்றல்யாழ்ப்பாணம்



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.